Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 04 புதன்கிழமை (20.09.2006)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 295

# இலங்கையின் அதிருப்தியை ஜனாதிபதி நோர்வே பிரதமரிடம் நேரில் தெரிவிப்பார்

## அனுசரணைப் பணிக்கு அப்பால் செல்வதை நிறுத்துமாறு இன்றைய சந்திப்பில் கோருவார்

நியூயோர்க், செப்ரெம்பர் 20

**இலங்கை அமைதி முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளர்கள் தமது பொறுப்புகளுக்கும், கடமைகளுக்கும் அப்பால் சென்று செயற்படுகின்றனர் எனக் கருதும் இலங்கை அரசுத் தலைமை, அதுபற்றிய தனது அதிருப்தியை நோர்வேயிடம் நேரில் தெரிவிக்கவுள்ளது.**

**நியூயோர்க்கில் இன்று நோர்வேப் பிரதமர் ஜென்ஸ் ஸ்ரோல்ரன் பேர்க்கைச் சந்திக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்த அதிருப்தியை அவரிடம் நேரடியாகவே தெரிவிப்பாரெனக் கூறப்படுகிறது.**

ஸ்தம்பித்துப் போயிருக்கும் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்துவதற்கு இலங்கை அரசு தயாரென, இணைத் தலைமை நாடுகளின் கடந்த வாரக்கூட்டத்தின்பின்னர் நோர்வே அனுசரணையாளர்கள் அறிவித்திருந்தனர். அத்தோடு, அந்தப் பேச்சுகள் அடுத்த மாத ஆரம்பத்தில் ஒஸ்லோவில் நடைபெற வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் வற்புறுத்தப்பட்டிருந்தது.

இந்த அறிவிப்பு அரசுக்குள் பெரும் சர்ச்

(08ஆம் பக்கம் பார்க்க)

### 'லிபர்பூல்' கப்பல் நேற்று புறப்பட்டது

திருகோணமலை, செப்.20

குடாநாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ''லிபர்பூல்'' என்னும் கப்பல் திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி நேற்றுப் புறப்பட்டுள்ளது.

இக்கப்பலில் 250 மெற்றிக்தொன் அரிசி, 500 மெற்றிக்தொன் சீனி, ஆயிரத்து 500 மெற்றிக்தொன் மா மற்றும் பால்மா ஆகியன எடுத்து வரப்படுகின்றன. காங்கேசன்துறையில் வைத்து பொருள் இறக்கும் பணி மேற்கொள்ளப்படவிருக்கின்றது. (1)

### மட்டக்களப்பில் 'கிபிர்' தாக்குதல்

ஏறாவூர், செப். 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீது நேற்றுக் காலை ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின.

(08ஆம் பக்கம் பார்க்க)

### 600 பயணிகள் நேற்று காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம்.செப்.20

குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக போக்குவரத்து வசதியின்றியிருக்கும் மக்களில் ஒரு தொகுதியினர் கப்பல் மூலம் பயணம் மேற்கொள்வதற்காக காங்கேசன்துறைக்கு நேற்று அழைத்துச்செல்லப்பட்டனர். யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் நேற்று அதிகாலை முதல் கூடிய சுமார் இரண் டாயிரத்துக்கும் மேற்பட்டவர்களில் 600 பேர் பஸ்களில் காங்கேசன்துறைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். (1)

## பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக மட்டும் இலங்கைக்கு அமெரிக்கா இராணுவ உதவி

### பேச்சுக்கான சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது என்கிறார் அமெ. தூதர்

கொழும்பு, செப். 20

இலங்கையில் பயங்கரவாதத்தை ஒழிக்க இராணுவத்துக்கு அமெரிக்கா உதவி வருகின்றது. இதேவேளை, பயங்கரவாதத்தை சட்டத்தாலும் இராணுவ நடவடிக்கைகளாலும் மாத்திரம் ஒழித்துவிட முடியாது. பேச்சுகள் மூலமே பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண முடியும்.

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் றொபர்ட் பிளேக் நேற்று கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பயங்கரவாதத்தையும், வன்முறையையும் கைவிட்டு தீர்வுக்கான பேச்சுக்குச் செல்லும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் மக்கள் ஒன்றுதிரண்டு பொத்துவிலில் ஆர்ப்பாட்டம்

பொத்துவில் காட்டுப் பகுதியில் பத்து முஸ்லிம் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்றுக் காலையும் பொத்துவில் நகரில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந் தொகையானோர் கோஷங்களை எழுப்பிய வண்ணம் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் வீதிகளில் ரயர்களை எரித்தனர். வாகனப் போக்குவரத்து இதனால் சிறிது நேரம் தடைப்பட்டது.

பின்னர் பொத்துவில் பள்ளிவாசலிலிருந்து ஒலிபெருக்கியில் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து இந்த ஆர்ப்பாட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், இச்சம்பவம் குறித்து நேரில் சென்று ஆராயவென அமைச்சர் ஏ.எச்.எம். பெளஸி தலைமையில் குழுவொன்றும் நேற்றுப் பொத்துவிலுக்குப் புறப்பட்டுச் சென்றது.(த)

## ஐந்து லாம்புச் சந்தியில் நேற்று வர்த்தகர்கள் கூடி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப்.20

கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்படுவது, கடத்திக் கொலைசெய்யப்படுவதை எதிர்த்து நேற்று கொழும்பில் ஆறு கட்சிகள் இணைந்து மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தின.

கொழும்பு ஐந்து லாம்புச் சந்தியில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள், முக்கியஸ்தர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி., இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர் விக்கிரபாகு கருணாரட்ன, ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, ஐக்கிய சோசலிச முன்னணித் தலைவர் சிறிதுங்க

(08ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை முன்னரங்குக்கு செய்தியாளர்களை இராணுவம் கூட்டிச்சென்றவேளை ஷெல் வீச்சு!

### நான்கு படையினர் பலி! 12 பேர் காயம்! ஏனையோர் அருந்தப்பு!

கொழும்பு, செப்.20

முகமாலைப் பகுதியில் - படைநிலைகள் மீது நேற்றுப் பகல் விடுதலைப் புலிகள் நடத்திய ஷெல் தாக்குதல் களில் படையினர் நால்வர் கொல்லப்பட்டனர் என்றும் பன்னிருவர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தென்னிலங்கையில் இருந்து இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட 25 ஊடகவியலாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்கள் கவச வாகனங்களில் முகமாலை முன்னரங்கப் பகுதிக்குக் கூட்டிச் செல்லப்பட்ட சமயத்திலேயே இந்தச் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்று இராணுவத் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

முகமாலையில் தாங்கள் முன்னேறியிருப்பதாகக் கூறும் பகுதியை நேரில் காட்டுவதற்காகவே படையினர் செய்தியாளர்களை அங்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நான்கு இராணுவக் கவச வாகனங்களில் செய்தியாளர்கள் முன்னணிப் பாதுகாப்பு நிலைகளுக்கு அருகே பயணித்துக் கொண்டிருந்தவேளை புலிகளின் ஷெல்கள் அந்த வாகன அணியை இலக்குவைத்து ஏவப்பட்டன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

இந்தத் தாக்குதலில் செய்தியாளர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அவர்களது விஜயம் பாதியில் நிறுத்தப்பட்டு உடனடியாக அங்கிருந்து அனைவரும் பாதுகாப்பாக பலாலி படைத்தளத்துக்கு கொண்டுசெல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்திலேயே நான்கு படையினர் உயிரிழந்தனர்; 12பேர் காய

(08ஆம் பக்கம் பார்க்க)

செய்தியாளர்களை முகமாலைக்கு ஏற்றிச் சென்ற கவச வாகன அணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சர்வஜன வாக்கெடுப்பு நடத்தாமல் வடக்கு - கிழக்கைப் பிரிக்காதீர்கள்!

## ஜனாதிபதி மஹிந்தவுக்கு இந்தியப் பிரதமர் நேரில் தெரிவிப்பு

ஹவானா, செப். 20

✱ தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு - கிழக்கு மாகா ணங்களைச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, மககளின் கருத்தை அறியாமல் பிரிக்காதீர்கள்.

✱ அத்தகைய வாக்கெடுப்பு அதற்குரிய உகந்த சூழலிலேயே சாத்தியமாகும்.

- இந்த இரண்டு விடயங்களையும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகத் தெரிவித்தார் எனக் கூறப்படுகின்றது.

அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஹவானா சென்றிருந்த இரு தலைவர்களும் அங்கு தத்தமது குழுவினர் சகிதம் சந்தித்துப் பேசினர். அந்தப் பேச்சின்போதே இந்தியத் தரப்பினால் இவ்வாறு வலியுறுத்திக் கூறப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

'இந்தோ - ஏஸியன் நியூஸ் சேர்விஸுக்கு' பிரபல செய்தியாளர் எம்.ஆர். நாராயண சுவாமி எழுதிய செய்தியில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தச் செய்தியில் இடம்பெற்ற ஏனைய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணப்பட முடியும், அதுவே அவசியம் என்பதை இலங்கை ஜனாதிபதிக்கு வலியுறுத்திய இந்தியப் பிரதமர், இராணுவத் தீர்வு சாத்தியப்படவே மாட்டாது என்பதையும் திடமாகவும், தெளிவாகவும் தெரியப்படுத்தினார்.

அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் விடயத்தில் தென்னிலங்கையின் பெரும்பான்மைச் சிங்களவர் இடையே இணக்கத்தை ஏற்படுத்தச் செய்யும் அதே சமயத்தில், தமிழர்களின் அபிலாஷைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியம் எனவும் இந்தியப் பிரதமர் வலியுறுத்தினார்.

சந்திப்பின் பின்னர் வெளியிடப்பட்ட தகவல்களின்படி, இரு தலைவர்களுக்கும் இடையில் சினேகபூர்வமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இருவரும் இலங்கை நெருக்கடி மற்றும் அதைத் தீர்ப்பதற்கான சர்வதேச முயற்சிகள் குறித்து விரிவாகப் பேசினர்.

உடனடி அவசரத் தேவை எதுவாக இருந்தாலும் புலிகளுடனான ஆயுத மோதலுக்கு பேச்சு மூலம் முடிவு கட்டும் எத்தனத்திலேயே இலங்கை ஆர்வம் காட்ட வேண்டும் என்பதை இந்தியா மிகத் தெளிவாக எடுத்துரைத்தது.

இரு பிரதிநிதிகள் குழுக்களும் புலிகள் அமைப்பு 'ஆபத்தான இயக்கம்' என்பதில் இணக்கம் கண்ட போதிலும், அது, புலிகளுடன் பேச்சு நடத்தும் விடயத்தில் குறுக்கீடான அம்சமாக வரக் கூடாது என்று புதுடில்லி நம்புகின்றது என்பதும் இலங்கைக்குத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் இலக்காக அமைய வேண்டியது அரசியல் தீர்வே; இராணுவத் தீர்வு அல்ல. - அதுதான் இந்தியாவின் செய்தியாக அமைந்தது.

தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் வடக்கும், கிழக்கும் உரிய சர்வஜனவாக்கெடுப்பின்றி பிரிக்கப்படக் கூடாது. அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பும் அதற்குத் தோதான சூழ்நிலைகளின் கீழேயே சாத்தியம். வடக்கு - கிழக்கு இணைப்பு தமிழ் மக்களின் உணர்வு பூர்வமான விடயம். - என்பதை இந்தியத் தலைமை அழுத்தித் தெரிவித்தது.

இலங்கை நீதிமன்றத்தின் முன்னால் வடக்கு, கிழக்கு இணைப்பு விடயத்தைக் கொண்டு சென்றிருக்கும் எதிரணியின் செயற்பாட்டுடன் தமது அரசுக்குத் தொடர்பில்லை என்று கருத்து வெளியிட்ட இலங்கை ஜனாதிபதி, இணைப்பு விடயம் அரசியல் விவகாரம், சட்டப் பிரச்சினை அல்ல என்றார்.

அடுத்த மாதம் முற்பகுதியில் புலிகளும், இலங்கை அரசும் ஒஸ்லோவில் பேச்சு நடத்துவர் என்று கடந்த 12 ஆம் திகதி பிரஸல்ஸில் வைத்து அறிவிப்பதற்கு முன்னர் அமைதி முயற்சிகளின் அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் தமது அரசுடன் அவ் விடயம் குறித்து கலந்தாலோசனை நடத்தவில்லை என்று ஜனாதிபதி ராஜபக்ஷ முறையிட்டார்.

இலங்கையில் நோர்வே அனுசரணைக்குக் கடும் எதிர்ப்பு இருந்த போதிலும் தாம் நோர்வேயின் அனுசரணைப் பணியைத் தொடர்ந்து பேணி வருகின்றார் என்றார் அவர்.

- இவ்வாறு அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## இரு கொலைகள்

### அச்சுவேலியில்

யாழ்ப்பாணம்.செப்.20

அச்சுவேலிப் பகுதியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டு சிறிது நேரத்தில் குளிர்பான நிலைய உரிமையாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பத்தின் போது பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலி பத்தமேனியில் குடியேறியிருந்த யோகராசா தமிழ்ச்செல்வன் (வயது 23) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அச்சுவேலி பஸ்நிலையத்தில் குளிர்பான நிலையத்தை நடத்திவரும் இவர் நேற்றுக் காலை 6.30 மணியளவில் கடையைத் திறக்கச் சென்றவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலிப் பொலிஸார் சடலத்தை பிரதே பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

(1-15-68-190-78-203-117-51)

### சிறுப்பிட்டியில்

யாழ்ப்பாணம்.செப்.20

சிறுப்பிட்டியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த லோகநாதன் செல்வக்குமார் (வயது 26) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வீட்டில் இருந்து சென்ற இவரை வழி மறித்த ஆயுததாரிகள் சுட்டுவிட்டுத் தப்பி விட்டனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (1)

# கொழும்புத்துறைப் பகுதியில் மூன்று ஆலயங்களில் திருட்டு

## ஊரடங்கு வேளையில் கைவரிசை

கொழும்புத்துறை.செப்.20

ஊரடங்கு அமுலில் இருந்த நள்ளிரவு வேளை கொழும்புத்துறைப் பகுதியில் ஒரே இரவில் மூன்று ஆலயங்களில் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயம், கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப்பிள்ளையார் கோயில், பாண்டியன்தாழ்வு வைரவர் கோயில் என்பவற்றிலேயே நேற்றுமுன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் கதவை உடைத்து உள்சென்ற திருடர்கள் செபமாலை மாதா ஆலயத்தில் நற்கருணைப் பேழை, குருச்சொரூபக் கூடு என்பவற்றை உடைத்து அவற்றிலிருந்து பெறுமதி மிக்க பொருள்களைக் களவாடியுள்ளனர். அத்துடன் பங்குத் தந்தையின் இல்லத்தினுள் புகுந்த திருடர்கள் அங்கும் பெறுமதி மிக்க பொருள்களையும் தளபாடங்களையும் திருடிச்சென்றுள்ளனர்.

வாகனங்களில் வந்த இந்த திருட்டுக் கும்பல் பிள்ளையார் கோயில்,வைரவர் கோயில் என்பவற்றில் குத்துவிளக்கு, தண்ணீர்ப்பம்பி, பூசைப்பொருள்கள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(1-17-30-203)

## கப்பல் பயணத்துக்கு காத்திருந்த பெண் திடீரென மயங்கி வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம்.செப்.20

கொழும்பு செல்வதற்காக கப்பலுக்கு காத்திருந்த பெண் மயங்கி வீழ்ந்து மரணமானார்.

மாமகேஸ்வரி அரியநேசன் (வயது 57) என்பவரே உயிரிழந்தவராவார்.

கொழும்பில் இருந்து கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்திருந்த இவர் போக்குவரத்து வசதியின்றி மிகவும் சோர்ந்து காணப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

நேற்றுப் புறப்படவிருந்த கப்பலில் பயணம் செய்வதற்காக இவர் நேற்று அதிகாலையே சிங்கள மகாவித்தியாலயத்துக்கு சென்றார் என்றும் -

பயணிகள் வரிசையில் நின்ற சமயம் திடீரென மயங்கிவீழ்ந்து மரணமானார் என்றும் - விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா விசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (1)

## சூட்டுக்காயங்களுடன் இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

உடுப்பிட்டி.செப்.20

கரணவாய், கரவெட்டி குருக்கள் பாடசாலைக்கு அண்மையில் நேற்று பிற்பகல் 2.15 மணிக்கு இனந்தெரியாதோரால் ஒருவர் சுடப்பட்டுள்ளார்.

அதேயிடத்தைச் சேர்ந்த ஆசிரியரான சிவானந்தம் சுப்பிரமணியம் (வயது 32) என்பரே சுடப்பட்டுப் படுகாயமடைநதார். படுகாயமடைந்தவர் சிகிச்சைக்காக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். இதேவேளை கைதடி தெற்குப் பகுதியிலும் இனந் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அதேயிடத்தைச் சேர்ந்த வி.எஸ். சுப்பிரமணியம் (வயது50) என்பவர் காயமடைந்தார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமுற்றவர் வீட்டில் இருந்தசமயம் இனந்தெரியாதவர்கள் வந்து சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(1-68-190-15-155-202-203-78)

## அதிரடிப்படை பொறுப்பதிகாரியை இடம் மாற்றாவிடில் கிழக்குப் பகுதி எங்கும் தொடர் போராட்டங்கள் நடக்கும்

### பொத்துவில் சென்ற அமைச்சர்களிடம் முஸ்லிம்கள் தெரிவிப்பு

பொத்துவில், செப். 20

பொத்துவில் - காக்கவெளி என்ற இடத்திலுள்ள விசேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி, பிரதம இன்ஸ்பெக்டர் குணரட்னவை உடனடியாக இடமாற்றஞ் செய்யுமாறு பொத்துவில் பிரதேச வாசிகள் நேற்றுக் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொத்துவில் பிரதேசத்தில் முஸ்லிம்கள் பதினொரு பேர் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகளை அறிவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, ரோகித்த அபே குணவர்த்தன, பிரதியமைச்சர் ஹுசைன் பைலா ஆகியோர் நேற்று அங்கு சென்றனர்.

கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபா நேற்று கையளிக்கப்பட்டது. பொத்துவில் - காக்கவெளி பள்ளிவாசலில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த அமைச்சர்மார், இந்தச் சம்பவம் குறித்து அரசு முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளும் என்பதால் அமைதி காக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டனர்.

இந்தக் கொலைகளின் பின்னணியில் காக்கவெளி அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி இருப்பதால் அவரை உடனடியாக இடமாற்றம் செய்யுமாறும், இல்லாவிட்டால் கிழக்கு மாகாணம் முழுவதும் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுமென்றும் முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள் அரச குழுவினரிடம் வலியுறுத்திக் கூறினரெனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## மற்றைய இளைஞரும் அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம்.செப்.20

உருப்பிராய் மூன்று கோயிலடியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களில் மற்றைய இளைஞரும் நேற்று அடையாளம் காணப்பட்டார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சிவானந்தன் பிரசன்னா (வயது 28) என்பவரே அந்த இளைஞன் என அவரது சகோதரனின் மனைவி அடையாளம் காட்டினார்.

ஏற்கனவே மற்றைய இளைஞன் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (1)

## சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சைக்கு தோற்றுவோருக்கு

யாழ்ப்பாணம்.செப்.20

கொழும்பில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சையில் தோற்றவிருப்பவர்களுக்கான பயண ஏற்பாடுகளைச் சட்டத்தரணிகள் சங்கம் செய்யவிருக்கின்றது.

இப்பரீட்சைக்கு தோற்றுபவர்களைத் தமது தொலைபேசி இலக்கங்களான 222 9830 அல்லது 222 3856 உடன் தொடர்பு கொள்ளுமாறு சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் கே.கேசவன் கேட்டுள்ளார். (1)


### கண்ணீர் விழிகளுடன் 6ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 25 - 10 - 1924



மறைவு 20 - 09 - 2000

**வேலன் பசுபதி**

*(காங்கேசன்துறை மார்புநோய் வைத்தியசாலை ஊழியர்)*

கண்களில் நீர் வடிகின்றது பப்பா
ஆனால் துடைப்பதற்கு உங்கள் கைகள் தான் இல்லை
சொல்வதற்கு செய்திகள் நிறைய இருக்கின்றது பப்பா
கேட்பதற்கு உங்கள் காதுகள் தான் இல்லை
ஏன்என்றால் நீங்கள் தேவலோகம் சென்று
ஆறு வருடங்கள் ஆகிவிட்டன உங்கள்
ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை
வேண்டிநிற்கின்றோம்.

நி.முகவரி: V.C.C., மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

த.முகவரி: உடுவில் வீதி, 2ஆம் ஒழுங்கை, மானிப்பாய்.

மனைவி, குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 07 - 01 - 1921



சிவன் அடியில் 21 - 08 - 2006

**அமரர் வேலுப்பிள்ளை சுந்தரம்**

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியோர்க்கும் மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று(20.09.2006) புதன்கிழமை எமதில்லத்தில் இடம் பெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக் கல்லூரியடி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## பேச்சு என்றதும் கிழக்கில் இனக் குரோதக் கொலைகள்

யுத்த காலத்திலும், ஏனைய வேளைகளிலும் அரசுடன் ஒரு தரப்பாகச் சேர்ந்து கைகோத்து ஆட்சி அதிகாரத்தில் பங்கு போடுவதற்கும் பதவிக் கதிரையில் ஒட்டிக்கொள்வதற்கும் போட்டி போடுவார்கள் முஸ்லிம் தலைவர்கள்.

ஆனால், பேச்சென்ற பேச்சு அடிபடத் தொடங்கியதும் தனித் தரப்பு - மூன்றாம் தரப்பு - என்ற கோசத்துடன் களமிறங்கி விடுவார்கள். முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளுக்காக மட்டுமன்றி இருப்புக்கான உரிமையையும் உறுதி செய்யும் நோக்கமும், இலக்கும் அந்தத் தனித்தரப்புக் கோஷத்துக்குள் அடங்கியிருப்பதால் அந்தக் கோரிக்கையைக் கொச்சைப்படுத்தி விமர்சிக்கவோ அல்லது தவறான எத்தனம் என்று அர்த்தப்படுத்தித் தூஷிக்கவோ இயலாது.

ஆனால், அரசு - புலிகள் அமைதிப் பேச்சென்ற விவகாரம் காதில் - காற்றில் - அடிபடத் தொடங்கியதுமே, மூன்றாம் தரப்புக் கோரிக்கையை வலியுறுத்தும் கோஷம் எழுவது போல, தமிழ் பேசும் மக்களின் தாயக மண்ணில் - அதுவும் குறிப்பாகக் கிழக்கில் - அரங்கேறும் அவலப் போக்கு ஒன்றையும் நாம் சுட்டிக் காட்டியாகவே வேண்டும்.

கடந்த நான்கரை ஆண்டு கால சமாதான முயற்சி வேளைகளில் நாம் பெற்றுக்கொண்ட பட்டறிவு - அனுபவப் பாடம் - இது.

அமைதிப் பேச்சு என்ற விவகாரம் முன்னெடுக்கப்பட்டு அரசுத் தரப்பும், புலிகள் தரப்பும் ஒரு மேசையில் அமர்வதற்கான - சாடைமாடையான - சமிக்ஞைகள் தென்படத் தொடங்கியதும், அதுவரை அடங்கியிருந்த மூன்றாம் தரப்புக் கோரிக்கை எப்படி முஸ்லிம் தலைவர்கள் மத்தியிலிருந்து பீறிட்டுக் கிளம்புகின்றதோ, அதுபோல அதுவரை அமைதியாக இருந்த களத்தில், தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிடுவதற்கு - உருவேற்றி உரசவிடுவதற்கு - தோதான காரண காரியங்களும் அரங்கேறி விடுகின்றன.

பேச்சுப் பற்றிய பேச்சுத் தொடங்கியதும் தமிழர்களும், முஸ்லிம் களும் நெருக்கமாக வாழும் கிழக்கில் இரண்டு தரப்பிலும் மாறி மாறி ஆட்களை அடையாளம் தெரியாதோர் 'போட்டுத் தள்ள', தமிழர் - முஸ்லிம்கள் இனக் குரோதமும், முறுகலும், பகையுறவும், விரோதப் போக்கும் உச்சத்தை அடைந்து, இரு இனங்களுக்கு இடையிலான பிணக்கும் எல்லை மீறுவது நடைமுறையாகி விடுவதுண்டு.

இப்போதும் கூட, மூதூர் அனர்த்தங்களைத் தவிர்த்து, அமைதியாக இருந்த கிழக்குக் களத்தில், கடந்த வாரம் இணைத் தலைமை நாடுகளின் அறிக்கையை அடுத்து அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் முன்நிபந்தனையற்ற நேரடிப் பேச்சுக்கான வாய்ப்புக் குறித்து - நீண்ட காலத்தின் பின்னர் - பேசப்படும் வாய்ப்பு ஏற்பட்டதும், பொத்துவில் பகுதியில் பதினொரு அப்பாவி முஸ்லிம்கள் - ஒன்றுமறியாத இளைஞர்கள் - கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது.

இந்தக் குரூரக் கொலைகளுக்குக் காரணமானவர்கள் யார் என்பதை உய்த்துணர முன்னரே, அந்தப் படுகொலைகளுக்கான பொறுப்பை தமிழர் மீது - புலிகள் மீது - சுமத்தி, தமிழர் - முஸ்லிம்கள் இடையே இனவிரோதத்தைத் தூண்டிவிடும் நடவடிக்கை தென்னிலங்கை ஊடகங்களினால் திட்டமிட்டு - கனகச்சிதமாக - செயற்படுத்தப்பட்டிருக்கின்றது.

அமைதிப் பேச்சுக்களில் தமிழ்ப் பேசும் மக்களின் பேரம் பேசும் வலிமையையும், வலுவையும் சிதறடிக்கச் செய்வதற்காக -

மூன்றாம் தரப்புக் கோரிக்கையை சர்ச்சையாக்கி, அரசியல் குரோதத்தையும் -

படுகொலை மற்றும் அழிவுச் சம்பவங்களை களத்தில் ஏற்படுத்தி, வன்முறைக் குரோதத்தையும் -

தமிழ்ப் பேசும் மக்களாகிய தமிழர் - முஸ்லிம்களிடையே ஏற்படுத்தி, அவர்களின் ஐக்கியத்தைக் குழப்பச் செய்யும் குள்ள நரித்தனம், நீண்ட காலமாகவே - கடந்த நான்கரை ஆண்டு சமாதான காலம் முழுவதுமே - இலங்கைத் தீவில் இடம்பெற்று வருவது அவதானிக்கத்தக்கது.

இணைத் தலைமை நாடுகளின் அறிக்கையை அடுத்து நேரடிப் பேச்சுக்கான மேலோட்டமான வாய்ப்புக் கருக்கட்டிய சூழலில் பொத்துவில் படுகொலைகள் இடம்பெற்றிருப்பதையும், அதற்கான குற்றச்சாட்டை புலிகள் மீது சுமத்துவதில் காட்டப்பட்ட வேகத்தையும் இந்தப் பின்னணியில்தான் நாம் நோக்கவேண்டும்.

இது வழமையான சதித்திட்ட நடவடிக்கைப் போக்கு என்றாலும் இம்முறை ஒரு வேறுபாடு இதில் உண்டு.

இவ்விடயத்தில் இனக்குரோதத்தை ஏற்படுத்த முயன்ற சதி நாசகாரர்களின் திட்டத்துக்குப் பலியாகாமல் - எடுபடாமல் - முக்கிய முஸ்லிம் தலைவர்களும், அப்பகுதி முஸ்லிம் மக்களும் தங்களைச் சுதாகரித்துக் கொண்டு, உறுதியோடு நியாயத்தின் பக்கம் கருத்து வெளியிட முன்வந்தமை, இந்தப் பேரழிவு வேதனைக்கு மத்தியிலும் குறிப்பிடத்தக்க, வரவேற்கக் கூடிய அம்சமாகும்.

எக்காலத்திலும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருப்பதற்கு மக்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்லர் என்ற உண்மை, படுகொலைகள் மூலம் இனக்குரோதத்தைத் தூண்ட முயன்ற கொலைகாரர்களுக்கும், அத்தகையோரை இயக்கும் சூத்திரதாரிகளுக்கும் இம்முறை புரியவைக்கப்பட்டிருக்கின்றது. இது நல்ல திருப்பம்.

வழமைபோல, கண்துடைப்புக்கு, இந்தக் குரூரக் கொடூரம் குறித்தும் விசாரணை செய்வதற்கும் விசேட புலனாய்வுக் குழுக்கள் நியமிக்கப்படும். உயரதிகாரிகள் விரைவர். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படுவர் என்று ஆலாபனை செய்யப்படும்.

இறுதியில் -

ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சமயம், அதன் தலைவர் லூயிஸ் அபோர் அம்மையார் இலங்கை குறித்து குறிப்பிட்டபோது சுட்டிக் காட்டியபடி -

இலங்கையில் பல சந்தர்ப்பங்களில் இத்தகைய குற்றங்கள் தொடர்பான விசாரணைகள், உரிய முடிவுகளை மட்டுமன்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியையும், பரிகாரத்தையும் கூட வழங்கத் தவறியுள்ளன என்பது போல -

இந்தக் கொலைகளுக்குரிய பொறுப்பும் யார் மீதும் சுமத்தப்படாமல் தட்டிக்கழிக்கப்பட்டு விடும் என்று திடமாக நம்பலாம்.

# நோர்வேக்கு எதிராக மக்கள் கருத்தை உருவாக்க மாவட்ட ரீதியாக நடவடிக்கை

### தேசாபிமான தேசிய இயக்கத்தின் நோக்கம் பற்றி வீரவன்ச விளக்கம்

கொழும்பு, செப்.20

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான நடவடிக்கைகளில் நோர்வே ஈடுபடுவதை நிறுத்தும்படி பொதுமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டுமென தேசாபிமான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு மாவட்ட ரீதியாக இந்தவிடயம் தொடர்பாகப் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக இந்த அமைப்பின் பேச்சாளரும் ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக கம்பஹா, அனுராதபுரம், கேகாலை, காலி ஆகிய மாவட்டங்களில் தமது எதிர்ப்பு பிரசாரங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கும் முகமாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கொழும்பு தேசிய நூலக ஆவணாக்கற் சபைக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கைக்கு உதவிவழங்கும் இணைத்தலைமை நாடுகள் விடுத்த கூட்டறிக்கை தொடர்பாக அரசு விமர்சனம் செய்துள்ளது.

இது தொடர்பாக இணைத்தலைமை நாடுகள் அவர்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். அதாவது விடுக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக இணைத்தலைமை நாடுகள் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கவேண்டும் அல்லது மன்னிப்புக் கோரவேண்டும். குறைந்தபட்சம் வருத்தமாவது தெரிவிக்கவேண்டும்.

இங்குள்ள இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்கள் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

இணைத்தலைமை நாடுகள் புலிகளைக் காப்பாற்ற முயற்சித்தால் நாம் அதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம்.

போர்நிறுத்த உடன்படிக்கையை இரத்துச்செய்து நோர்வேயினரை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும். இந்த உடன்படிக்கை இருப்பதால் தான் தங்களுக்குரிய பகுதிகளில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டுமெனப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறுகிறார். இதற்கு முன்னரும் போர்நிறுத்தங்கள் இருந்த போதும் அவற்றில் இப்படி எதுவுமில்லை.

எனவே, தங்களுக்கென்ற இடத்தில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு கூறும் புலிகளின் உரிமையை அற்றுப்போகச் செய்யவேண்டும். அதற்குப் போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசு விலகவேண்டும்.

எனினும் தேவையென்றால் புலிகள் ஆயுதங்களை வைத்தபின்னர் புதியதொரு போர்நிறுத்தத்தை ஏற்படுத்தலாம். பிரதமரும் இதுபற்றிக் கூறியுள்ளார் - என்றார்.

(ப-203)

## பங்கீட்டு அடிப்படையிலான டீசல் விநியோகம் ஆரம்பம்

அரியாலை, செப் 20

எரிபொருள் விநியோக அட்டை பெற்ற வாகனங்களிற்கு எரிபொருள் விற்பனை நிலையங்களில் டீசல் விநியோகிக்கும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலாளர் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களினால் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் டீசல் பெறும் பொருட்டு வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டை பெற்ற வாகனங்களுக்கு மட்டும் இருபது லீற்றர் டீசல் விநியோகிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உழவு இயந்திரங்களிற்கு 300 ரூபாவுக்கும் ஏனைய வாகனங்களிற்கு 750 ரூபாவுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

அதேசமயம்- பிரதேச செயலாளர் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையாளரினால் சிபாரிசு செய்யப்பட்ட வெதுப்பகங்களுக்கும், அரைக்கும் ஆலை, கல்லுடைக்கும் ஆலை போன்றவற்றிற்கும் முதற்கட்டமாக 750 ரூபாவுக்கு டீசல் வழங்கப்பட்டது.

(ப-17)

## நலன்புரி நிலையங்கள் பற்றிய பொதுக் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்.செப்.20

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் நலன்புரி நிலையங்களின் நிலைமை தொடர்பாக இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் பொதுக்கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இதில் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் உதவி வழங்கும் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், நடமாடும் மருத்துவ சேவையினர் அனைவரையும் பங்குகொள்ளுமாறு யாழ்.பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

(ப-203)



அணிசேரா இயக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ - தலைமையிலான அரச தூதுக் குழுவினர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்தவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியப் பிரதமருக்கு கைலாகு கொடுத்து உரையாடுவதை படத்தில் காணலாம்.

## மா, சீனி விநியோகம்

நவாலி.செப்.20

மானிப்பாய் பலநோக்குச் சங்கக் கிளைகள் மூலம் குடும்ப அட்டைகளுக்கு பங்கீட்டு முறையில் மா, சீனி என்பன வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை சென்ற தடவை மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளாத பாவனையாளர்களுக்கு தற்போது மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ப-100)

## காணாமற் போனோரை வெளிப்படுத்தக் கோரி மரியன்னை ஆலயத்தில் உண்ணாவிரதம்

குருநகர், செப் 20

குடாநாட்டில் காணாமற்போனோர் மற்றும் அல்லைப்பிட்டிக்குச் சென்ற சமயம் காணாமற்போன அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஜிம்பிறவுண் அடிகளார் மற்றும் அவரது உதவியாளர் விமலதாஸ் ஆகியோரின் 31ஆம் நாள் நினைவு தினமான நேற்று அவர்களது வெளிப்படுத்தலை வேண்டி யாழ்.மரியன்னை பேராலயத்தில் உண்ணாவிரதம், செபவழிபாடு, திருப்பலி, நற்கருணைநாதர் ஆராதனை ஆகியவை நடைபெற்றன.

யாழ்.மரியன்னை ஆலயத்தில் நேற்றுக் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை இந்நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நேற்று நண்பகல் 12 மணிக்கு திருப்பலியை நிறைவேற்றினார். அவர் கறுப்பு உடையுடன் திருப்பலியை ஏனைய குருக்களுடன் இணைந்து நிறைவேற்றினார்.

இந்நிகழ்வில் குருக்கள், கன்னியாஸ்திரிகள், பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் கலந்து கொண்டனர். (1-51)

## ஆதாரங்காட்டி அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்.செப்.20

யாழ்.போதனா வைத்தியசாலையின் வளாகத்தினுள் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன எனவும் உரியவர்களை ஆதாரங்காட்டி பெற்றுக்கொள்ளுமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளிலுள்ள பெயர் விவரம் வருமாறு:- இரத்தினதுரை விஜயகுமாரி-ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு, மயூரன் - மாவிட்டபுரம், தெல்லிப்பளை, சுசீலா சிவலிங்கம் - குப்பிளான் தெற்கு, அப்புத்துரை அனுசுஜா - கல்லந்தாழ்வு, காரைநகர், வீரசிங்கம் பூபதி - 514/14, வைத்தியசாலை வீதி யாழ்., இராசையா பத்மநாதன் - [illegible] வீதி, [illegible] தெற்கு, சிதம்பரன் [illegible] - 5ஆம் [illegible] ரம், அனலைதீவு, சண்முகம் வீரசிங்கம் - முத்தமிழ்வீதி, கொட்டடி யாழ்ப்பாணம், கிருஸ்ணபிள்ளை ஜெசிந்தா - முழங்காவில், விநாயகபுரம், தளையசிங்கம் ரஞ்சன் - கொக்குவில் கிழக்கு, சின்னத்துரை அருந்ததி - இருபாலை கிழக்கு, கோப்பாய்.

(ப-203)

## பொலிகண்டியில் சுற்றிவளைப்புத் தேடுதல்

உடுப்பிட்டி, செப் 20

வடமராட்சி, பொலிகண்டிப் பகுதியில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

மேற்படி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களை அடுத்து நேற்று சுற்றிவளைப்பு இடம்பெற்றது. (1-155)

## குருநகரில் மீன் பிடிக்க நேற்று அனுமதியில்லை

யாழ்ப்பாணம், செப்.20

குருநகர் இறங்குதுறையூடாக குடாக்கடலில் மீன்பிடிக்கச் செல்வதற்கு நேற்றுப் படையினர் அனுமதிக்கவில்லை என குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதும் மீனவர்கள் குருநகர் இறங்குதுறைக்குச் சென்ற போதிலும் படையினர் அனுமதி வழங்காதமையால் திரும்பி வந்ததை அவதானிக்க முடிந்தது. (1-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்யா இசைப் பயிலகம்

*மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு*

02.10.2006 திங்கட்கிழமை விஜயதசமியாகிய நன்நாளில் இசை, இசைவாத்திய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

- மிருதங்கம்
- வயலின்
- ஓகன்
- புல்லாங்குழல்
- வாய்பாட்டும், பண்ணிசையும்.

**இன்று முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.**

தொடர்பு: பாக்யா காகிதாதிகள்
121, கே.கே. எஸ்.வீதி, கொக்குவில்.

(53751)

## கண்ணீர் அஞ்சலி



யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பௌதிகவியல் ஆசிரியரும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினருமாகிய

### திரு.இ.தவபாலன்

அவர்கள் 18.09.2006 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்அவரது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்.

(அ-51015)

## கண்ணீர் அஞ்சலி

### அப்பச்சிப்பிள்ளை அமிர்தலிங்கம் (அமுது)

27.08.2006 அன்று சிவபதமடைந்த கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் எமது சனசமூக நிலையத்தின் ஆயுள் கால உறுப்பினருமாகிய **அப்பச்சிப்பிள்ளை அமிர்தலிங்கம்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது அத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**செயலாளர்.**
கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்.

(53803)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 1939 . 08 . 14



உதிர்வு 2006 . 08 . 22

### திருமதி மாணிக்கம் ஆச்சிப்பிள்ளை

*என்றும் உன்னை மறவோம் அம்மா*
*அன்பின் இருப்பிடமே*
*பண்பின் அன்னையே*
*எமை ஆளாக்கிய தாயே*
*உங்கள் அன்பு முகம்*
*நின்றும் எம் நெஞ்சில்*
*நிழலாக நின்று நினைவூட்டுகிறதே*
*நன்நெறியில் நாம் வாழ*
*வழிகாட்டிய தாயே*
*வணங்கியே துதிக்கின்றோம்*
*உம் ஆத்மா சாந்தி பெற.*

கடந்த 22.08.2006அன்று இறைவனடி சேர்ந்த எம் இல்லற விளக்கு மாணிக்கம் ஆச்சிப்பிள்ளையின் 31ஆம் நாள் நினைவை முன்னிட்டு அன்னாரின் இல்லத்தில் நாளை (21.09.2006) வியாழக்கிழமை இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பொற்கொல்லர் வீதி, மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
குடும்பத்தினர்.

(53689)

## ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு உணவுப்பொருள்

தென்மராட்சி கிழக்கு, செப். 20

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு இலவச உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றை பாடசாலை தொடங்கும் நேரத்தில் அல்லது ஊரடங்கு தளர்த்தப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின்னர் உரிய பிள்ளைகளின் பெற்றோர் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் -

இவ்வுணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல வசதியாக வெற்றுப் பைகளைக் கொண்டுவருமாறும் பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ப-122)

## மாவின்மையால் பாண், பணிஸ் தட்டுப்பாடு

வலி.தென் மேற்கு, செப்.20

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் பாணுக்கும் பணிஸ், கல்பணிஸ் போன்றவற்றுக்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாவுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதால் பல குடும்பங்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

சங்கக் கடைகளில் தற்போது பங்கீட்டுக்கு வழங்கப்படும் மா தேவைக்குப் போதாது என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, குரக்கனுக்கும் இப்பகுதியில் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. பல குடும்பங்கள் மாவுக்குப் பதிலாகக் குரக்கன் மாவைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன. இதனால் 40 ரூபாவாக விற்ற ஒரு கிலோ குரக்கன் தற்போது 50 ரூபாவாக அதிகரித்துள்ளது. (ப-135)

## செயலர் பிரிவுகளில் எரிபொருள் ஏற்பாடு

தென்மராட்சி, செப். 20

எரிபொருள் தட்டுப்பாட்டினால் பேருந்து சேவைகள் ஸ்தம்பிக்கும் நிலையைத் தவிர்க்க பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள எரிபொருள் நிலையங்கள் மூலம் டீசல் வழங்கப்படவுள்ளது.

எரிபொருள் நிலையங்களில் அத்தியாவசிய தேவைக்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த டீசலில் 100 லீற்றர் வீதம் ஐந்து நாள்களுக்கு வழங்க பிரதேச செயலர்கள் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## வேலணை கிராமிய வெளிநோயாளர் பிரிவுகள் ஆரம்பம்

குருநகர், செப். 20

வேலணை கிராமிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மட்டும் இயங்கிவருவதாகவும் சிகிச்சை நிலையங்களில் நோயாளர் தங்கி சிகிச்சை பெறும் பணி இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லையெனவும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் நேற்று செவ்வாய்க்கிழமையும் எதிர் வரும் வெள்ளிக்கிழமையும் சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்து தொடர்ந்து நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப-51)

## சிறுபிள்ளைகளுக்கு உடுபுடைவைகள்

போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள குடும்பங்களின் சிறுபிள்ளைகளுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் உடுபுடைவைகள் வழங்கப்படுகின்றன. (ப-100)

## Message of felicitation



### Mr.V.Karunanithy

Your appointment as the Director of the Advanced Technological Institute of Jaffna is a deserving reward for your dynamic personality. We wish you all success.

2nd year students,
Higher National Diploma in English (Evening), ATI, Jaffna.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசான்

### கதிரவேலு மகாதேவா

அவர்கள் 14.09.2006 அன்று இறைபதமடைந்ததை இட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைந்துள்ளோம். அவருடைய இழப்பினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆசிரியர் சகோதரத்துவம்**
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(53800)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### ஆறுமுகம்(லச்சுமணன்) அன்னப்பிள்ளை

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 27.07.1924 | 21.08.2006 |

*இன்று (20.09.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*21/27, வைரவர் கோயில் வீதி,*
*அரியாலை.*

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(53782)

## மரண அறிவித்தல்கள்

### R.D.நாகலிங்கம் R தருமலிங்கம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 1ஆம் குறுக்குத் தெரு, 190/5இல் வசித்தவருமாகிய **R.D.**நாகலிங்கம் தருமலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற **R.D.**நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுவாமிநாதர் (சங்கிலி விதானையார்) நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், நவமணி, செல்வநாயகம், காலஞ்சென்ற செல்வரத்தினம், செல்வரஜனி, செல்வரவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், சந்திரவதனி, அந்தோனிப்பிள்ளை, நளினி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம், தம்பையா மற்றும் அன்னான் அன்னபூரணி தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ம.எட்வேட் (பொன்னுத்துரை) காலஞ்சென்ற கனகராசா மற்றும் நாகமுத்து காலஞ்சென்ற ஆகத்தம்மா, குமாரவேலு (பாண்டியன்குளம்) காலஞ்சென்ற கோமளம் தம்பையா, திருமதி கனகம்மா ஆலாலசுந்தரேசன் (ஆசிரியை), **N.S.** முருகேசு (முன்னாள் விளையாட்டு அதிகாரி, கிளி - பூநகரி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.09.2006) புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**த.செல்வநாயகம்**
(மகன்)

(53516)

### முத்துச்சாமி ஐயர் சிதம்பரநாதக்குருக்கள்



பருத்தித்துறை வியாபாரிமூலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயில் முன்னாள் பிரதம குருவுமாகிய சிவசிறி முத்துச்சாமி ஐயர் சிதம்பரநாதக்குருக்கள் 19.09.2006 அதிகாலை மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியம்மாளின் அன்புக் கணவரும் சுந்தராம்பாள், காலஞ்சென்ற பரமேஸ்வரி, சபாரத்தின தேசிகர் (பண்டாரி அம்மன் கோயில்), லோகநாதக் குருக்கள் (கரவெட்டி நுணுவில் பிள்ளையார் கோயில்), மனோன்மணி, யோகேஸ்வரி, கிருஸ்ணமூர்த்தி (அயர்லாந்து), மகேந்திரநாதக் குருக்கள் (தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் கோயில்), ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.09.2006) செவ்வாய்க்கிழமை மூத்த மகளான செல்லையாக் குருக்கள் சுந்தராம்பாள் (மட்டக்களப்பு, சந்திவெளி) அவர்களின் இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குருக்கள் பகுதி, கரணவாய்,*
*கரவெட்டி.*

தகவல்:
**சி.லோகநாதக்குருக்கள்**
(மகன்)

(53806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் மண் பரிசோதகர் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2006

வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் மண் பரிசோதகர் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 09.10.2006 ஆகும்.

02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானதும் பங்களிப்பு ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். ஏற்கனவே ஓய்வூதியத்திற் குரித்துடைய பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர் ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை இருப்பதோடு, விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்குத் தொடர்ந்து பங்களிப்புத் தொகையினை செலுத்த வேண்டும்.

2. இது ஓர் இடமாற்று சேவையாகும். இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். அத்துடன் முதல் நியமனம் வழங்கப்படும் நிலையத்தில் கட்டாயமாக 05 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்.

3. பயிற்சி தரத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்கள் 2 வருட தத்துவ மற்றும் செயல்முறை பயிற்சிக்காலத்தை சிறந்த முறையில் பூர்த்தி செய்வதுடன் தொடர்ந்து நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் சித்திபெறுவதுடனும், பயிற்சிக் கால எல்லைக்குள் அவர்களது வேலை, நடத்தை, வரவு என்பன திருப்திகரமானதாக இருக்கும் பட்சத்தில் வகுப்பு II 'ஆ' விற்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்கள். பயிற்சியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யாத பயிலுநர்கள் பயிற்சியிலிருந்து நீக்கப்படலாம்.

03. சம்பள அளவுத்திட்டம்:
பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006ற்கு அமைய, ஆட்சேர்ப்புச் செய்யப்படும். மண் பரிசோதகர் பயிலுநர் தரத்திற்குரிய மாதந்த சம்பள அளவுத்திட்டம் :
ரூபா 13,860 - 1 x 140 - 14,000/-

04. தகைமைகள்:

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாத வராகவும், 45வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் / மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)
ஈ. வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:
வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்தபோதிலும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரணச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறாயின் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமெனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம் பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும், நேர்முகப்பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

உ. கல்வித் தகைமைகள்
திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்கள் க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் தூய கணிதம், பௌதிகவியல் உட்பட மூன்று விஞ்ஞான பாடத்தில் சித்திபெற்றிருப்பதுடன், க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வுக்கு மேற்படாமல் தமிழ் / சிங்களம் மொழி அல்லது இலக்கியம், எண்கணிதம்/கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமை சித்தி பெற்றிருப்பதுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

05. ஆட்சேர்ப்பு முறை:
எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையில் பொது நிர்வாக சுற்றறிக்கைகளுக்கும், ஆட்சேர்ப்பு நேரத்தில் உள்ள தேசிய மற்றும் மாகாண கொள்கைகளுக்கு அமையவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடாத்துவது கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

06. எழுத்துப் பரீட்சை
இப் பரீட்சை தமிழ் / சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப்பதாரி பரீட்சையில் தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். இப்பரீட்சை மூன்று வினாப்பத்திரங்களைக் கொண்டதாக இருக்கும். இப் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் பின்வருமாறு.

| வினாப்பத்திரம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|
| (i) பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| (ii) தொழில்நுட்ப வினாப்பத்திரம்I (கணிதம்) | 03 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |
| (iii) தொழில்நுட்ப வினாப்த்திரம் II (பௌதிக விஞ்ஞானம்) | 03 மணித்தியாலம் | 100 புள்ளிகள் |

பொது அறிவு :
விண்ணப்பதாரிகளின் தர்க்கிக்கும் திறன், அவரது ஆற்றல் தீர்மானமெடுத்தல்.

தொழில்நுட்ப வினாப்பத்திரம் **I** (கணிதம்):
கேத்திரகணிதம், திரிகோணகணிதம் ஆகியவை சம்பந்தமாக பரீட்சிக்கப்படும்.

தொழில்நுட்ப வினாப்பத்திரம் **II** (பௌதீக விஞ்ஞானம்):
திரவம், திரவங்களின் பௌதீக தன்மை, திரவ விஞ்ஞானம், அளவெடுத்தல், விஞ்ஞான அளவுகள் சம்பந்தமாக பரீட்சிக்கப்படும்.

ஒவ்வொரு வினாத்தாள்களில் சித்திபெறுவதற்கு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்

07. பரீட்சைக் கட்டணம்:
விண்ணப்பதாரி வதியும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 250/-ஐச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு இன்றி அனுப்பப்படும் எந்த ஒரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். அத்துடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமான ரூபா 250/-ஐச் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற பெயருக்குக் காசுக் கட்டளையாகப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

08. விண்ணப்பிக்கும் முறை :
இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ண்ப்பங்கள் 09.10.2006ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, இல:35, மக்கெய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

09. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு:-

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1 | திருகோணமலை | 6 |
| மன்னார் | 2 | மட்டக்களப்பு | 7 |
| வவுனியா | 3 | அம்பாறை | 8 |
| கிளிநொச்சி | 4 | கல்முனை | 9 |
| முல்லைத்தீவு | 5 | | |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித்தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**செயலாளர்,**
*மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,*
*வடக்கு கிழக்கு மாகாணம்,*
*திருகோணமலை.*

*(மாதிரி விண்ணப்பப் படிவம் 6ஆம் பக்கத்தில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி விண்ணப்பப் படிவம்
# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைக்கு இலங்கை தொழில்நுட்ப சேவையின் மண் பரிசோதகர் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2006

சுட்டெண்: [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)
பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:
தமிழ் T / சிங்களம் S [ ]

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்: திரு/திருமதி/செல்வி :-
தமிழில் :-............................................
ஆங்கிலத்தில்(பெரியஎழுத்துக்களில்):-............................................

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:-
தமிழில் :-............................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :-............................................

03. தபால் முகவரி:-
தமிழில் :-............................................
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்):-............................................

04. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண் :- [ ]
(09 வது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)

05. பால்:- ஆண் (M) / பெண் (F) [ ]

06. பிறந்த திகதி:
09.10.2006ஆம் திகதியன்று வயது

| வருடம் : | மாதம் : | திகதி : |
|---|---|---|
| வருடங்கள்: | மாதங்கள் : | நாட்கள்: |

07. அடையாள அட்டை இல. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

08. இனம் : சிங்களவர் [ ] இலங்கைத்தமிழர் [ ] இந்தியத்தமிழர் [ ]
முஸ்லிம் [ ] ஏனையவர் [ ]

09. நீங்கள் இலங்கைப் பிரஜையா ? ஆம் / இல்லை

10.(1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்:
............................................
(2) பிரதேச செயலாளர் பிரிவு:- ..............................
கிராம சேவகர் பிரிவு:- ..................
(3) வதியும் கால எல்லை: .................. தொடக்கம் .................. வரை
(4) வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின், தங்கள் நிரந்தர
வதிவு மாவட்டம:- ............................................
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம்:.......................
மாகாணம்:......................
இடம்பெயர்ந்த ஆண்டு:.............. மாதம்: ........... திகதி: .........

11. கல்வித்தகைமைகள் :
1. க.பொ.த(சா/த):-
1ஆம் அமர்வு
ஆண்டு:........................ சுட்டெண்: ..........................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

2. க.பொ.த(சா/த):-
2ஆம் அமர்வு
ஆண்டு:........................ சுட்டெண்: ..........................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

3. க.பொ.த(உ/த):-
ஆண்டு:........................ சுட்டெண்: ..........................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

12. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.
[ ]
பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட ..................................
.......................... பிரதேசசெயலகத்தின் ..............................
...... ஆம் இலக்க .......................... ஆந் திக்திய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது.

13. விண்ணப்பதாரியின் உரை
1) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாமையினாலோ அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இதில் உள்ள சகல பிரிவுகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.
2) என்னால் தரப்பட்ட விடயங்கள் பொய்யானவை எனத்தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதை நான் அறிவேன்.
3) இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகள் அனைத்திற்கும் அமைந்தொழுக நான் உடன்படுகின்றேன்.

திகதி:........................ ..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. விண்ணப்பப்பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா **200,046/=**இற்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:
விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/திருமதி/செல்வி ....................
.............................. என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ............
.............................. ஆந்திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ........................ ..............................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர்:
பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

15. வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்துள்ளவர்களின் உபயோகத்திற்கு மட்டும்.
மேற்படி விண்ணப்பதாரி வடக்கு கிழக்கு மாகாணத்தை பிறப்பிடமாக / நிரந்தர வதிவிடமாக கொண்டவர் என்பதையும், அவர் ....................
........................ திகதிமுதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ..............
.................................. மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் இத் தற்காலிக வதிவிடத்தை ஆதாரமாக வைத்து இம் மாகாண சபையில் எப்பதவிக்கும் விண்ணப்பிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:...................... ..............................................
கிராம சேவையாளர் கையொப்பம்
பதவி முத்திரை

கிராம சேவையாளர் பிரிவு:
பிரதேச செயலாளர் பிரிவு :

16. திணைக்களத் தலைவரின் உறுதியுரை:-
இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி ..................................: அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை விடுவிக்க முடியும். என்பதையும் இவர் தனது சேவைக் காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்பதையும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ............................ ..............................................
திணைக்களத்தலைவரின் கையொப்பம்.

முழுப்பெயர்:
பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக நண்பன் சேஷானந்தின் பாசமிகு தந்தை



### இரத்தின்சபாபதி தவபாலன்

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

29ஆம் அணி, மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(53814)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 - 03 - 1952



மறைவு 21 - 08 - 2006

21.08.2006 அன்று சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு

### அமரர் செல்லத்துரை திருச்செல்வம் (கோயில் வீதி, மல்லாகம்)

அவர்களுடைய வீட்டுக்கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.09.2006) புதன்கிழமை சுழிபுரம் மத்தி, சுழிபுரத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

மேலும், அன்னாரது சுகயீன காலத்தில் பேருதவி புரிந்த யாழ். போதனா வைத்தியசாலை விடுதி பத்து வைத்திய கலாநிதி பேரானந்தராஜா, வைத்திய உத்தியோகத்தர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், இரத்த சுத்திகரிப்பு நிலைய வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள்,

மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த வைத்திய அதிகாரி, வைத்திய உத்தியோகத்தர்கள், தாதிய உத்தி யோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலை வைத்தியர்கள், உதிஸ்ரன் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் அங்கு கடமைபுரியும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வேறுபலவித உதவி புரிந்தவர்களுக்கும் மிகவும் உதவி புரிந்த சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த ஆட்டோ ரவிக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.
(53807)
சகோதரர்கள்.

## 31 ஆம் நினைவேந்தல்

தாயின் மடியில் 1942 . 11 . 07



நோயின் பிடியில் 2006 . 08 . 21

### அமரர் மாணிக்கம் நடராஜா அவர்கள்

(இளைப்பாறிய மருந்துக்கலவையாளர், அரசினர் வைத்தியசாலை)

(20 - 09 - 2006 புதன்கிழமை)

இருப்பார் என்றிருந்தோம்
இப்படி இறப்பார் என்று நினைக்கவில்லை
மருந்துகளோடு தொழில் புரிந்த
உங்கள் நோயைக் குணப்படுத்த...!
மருந்துகள் இல்லாமல் போனதே
இருந்தாலும் - இருப்பார் எம் நெஞ்சில்
இறக்காமல் என்றும்!!

குடைகள் பிடித்துத் தடுக்கக் கூடியதா இடி?? இருந்தும், இமையெனத் துணையிருந்தவரை நாம் இழந்து பரிதவித்த வேளை கொழும்பு பொரளையில் நடைபெற்ற இறுதிக்கிரியை நிகழ்விலும், அன்னாரது இல்லத்தில் நடைபெற்ற துயர்பகிர்விலும் கலந்தும் மற்றும் தொலைபேசி மூலமாகவும் மனதின் வலி குறைத்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனந்திறந்து நன்றி கூறுவதோடு, சீரணி, சண்டிலிப்பாயில் இவரது இல்லத்தில் இன்று (20.09.2006 புதன்கிழமை) நடைபெறும் நினைவேந்தல் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும்படி தங்களை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்மா அமைதியடையட்டும்!!!

துயரோடு தகவல்:
செல்வராணி (மனைவி)
திரு. திருமதி உதயகுமார்
தனுசஜன் (மகன்)
தர்மிலன் (மகன், கனடா)

தொடர்பு: 0785113388
0777030880
milannada909@hotmail.com
n_tmilan@yahoo.ca

### மட்டுவில் வடக்கில் சுற்றிவளைப்புத் தேடுதல்

தென்மராட்சி பிரதேசத்தில் மட்டுவில் வடக்கு, கனகன்புளியடி, சரசாலை ஆகிய பகுதிகள் நேற்று முன்தினம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இதனால் இப்பகுதியில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை உப அலுவலகம், பொதுநூலகம் மற்றும் சாவகச்சேரி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடைகள் என்பனவும் திறக்க அனுமதிக்கப்படவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கனகன்புளியடிச் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்து படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் இரு படையினர் காயமடைந்தனர். அந்தச் சம்பவத்தை யடுத்தே சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது.

(1-117)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane , Jaffna.
Telephone :- 021-2228250 , 0777-222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

DIPLOMA IN HARDWARE ENGINEERING
Course fee :- 2000/=
DIPLOMA IN VIDEO MIXING
Course fee :- 3000/=
free study pack & drive CD
DIPLOMA IN GRAPHICS DESIGNING
Course fee :- 2000/=
Diploma in Computerized Accounting
Course Fee: 3500/=

கற்கைநெறியின் நன்மைகள் :-
- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புகள் ஆரம்பம் :- 25-09-2006 : 09.00 a.m

ஏனைய அனைத்து கற்கைநெறிகளிற்கானபுதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது
Batch - I 30.09.2006, Batch - II 01.10.2006
Batch - III 27.09.2006, Batch - IV 29.09.2006

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பௌதிகவியல் ஆசிரியரும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினருமாகிய,

### இ.தவபாலன்

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.
(அ-51014)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் பௌதிகவியல் ஆசிரியர்

### இ.தவபாலன்

அவர்கள் 18.09.2006 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்,
யாழ். கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம், யாழ்ப்பாணம்.
(அ-51016)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். கனகரத்தினம் (ஸ்ரான்லி) மத்திய மகா வித்தியாலயத்தின் பௌதிகவியல் ஆசிரியர்

### இரத்தினசபாபதி தவபாலன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். கல்லூரியின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய சேவையினை இத்தருணத்தில் நினைவு கூருவதோடு, அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கனகரத்தினம் (ஸ்ரான்லி) மத்திய மகா வித்தியாலயம்.

பணியாள் தேவை

தனியார் வைத்தியசாலை ஒன்றில் உதவியாளராகப் பணிபுரிவதற்கு பெண் ஒருவர் தேவை. வயதுக் கட்டுப்பாடு இல்லை. விண்ணப்ப முடிவு திகதி 30.09.2006

(தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும்)

தொடர்பு: விளம்பர இல. 2926
(53812) மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

மணமகள் தேவை

அரச உத்தியோகம் பார்க்கும் தாரமிழந்த மணமகன் ஒருவருக்கு 35-45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. வரதட்சனை தேவையில்லை. வாழ்விழந்த, சுனாமியால் பாதிக்கப்பட்டோர், வறு...

தொடர்பு: விளம்பர இல. 2925
(53813) மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினசபாபதி தவபாலன் (B.Sc.Dip.in Bd)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல.85/9, ஆனந்தன்வடலி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி தவபாலன் 18.09.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி-கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் வசந்தகுமாரியின் அன்புக் கணவரும் செல்லத்துரை-இராசம்மா தம்பதியரின் மருமகனும் பவாணந் (பொறியியல் பீடம் 3ஆம் வருடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), சேசானந் (மருத்துவ பீடம் முதலாம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்), பவீனா (தரம்9, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வஜபாலனின் (பியலங்கா எக்ஸ்போட் லிமிட்டெட்) அன்புச் சகோதரரும் வசந்தகுமார், இரத்தினகுமார், இந்திரகுமார், சந்திரகுமார், சூரியகுமார், மிஸ்ரிகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2006) புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

85/9 ஏ.வி. றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.
021 4590419

தகவல்:
த.வசந்தகுமாரி
(மனைவி)

### திருமதி குழந்தைவேலு ஈஸ்வரி

கொடிகாமம் கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி வட்டக்கச்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குழந்தைவேலு ஈஸ்வரி 16.09.2006 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான கணபதிப்பிள்ளை குழந்தைவேலுவின் அன்பு மனைவியும், அனலட்சுமி குமாரசாமியின் அன்புச் சகோதரியும், விநாயகமூர்த்தி (உசன்), தவமணி (வட்டக்கச்சி), நடராசா (கொடிகாமம்), தவமலர் (பிரான்ஸ்), ஸ்ரீரங்கநாதன் (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தேவி (உசன்), சோமநாதர் (வட்டக்கச்சி), நகுலேஸ்வரி (கொடிகாமம்), அரியநாயகம் (பிரான்ஸ்), ஸ்ரீநந்தினி (சுவீடன்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், துஸ்யந்தி, சாவித்திரி, சிவரூபன், சிவநேசன், கோபிகா, கேமா, சுந்தர், தட்ச்சா, ஷாரங்கி, ஷாரங்கன், வாசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாணுஜனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.09.2006 சனிக்கிழமை அன்று வட்டக்கச்சியிலுள்ள மகளின் வீட்டில் நடைபெற்று, மம்மில்குளம் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 004642245402
0046707876813

தகவல்:
ஸ்ரீரங்கநாதன்
(மகன்- சுவீடன்)

### யோகராசா தமிழ்ச்செல்வன் (பெரியதம்பி)

(உரிமையாளர், ஐங்கரன் கிறீம் ஹவுஸ் - அச்சுவேலி)

பலாலியைப் பிறப்பிடமாகவும் பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராசா தமிழ்ச்செல்வன் நேற்று (19.09.2006) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை யோகராசா - செல்வராணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் செந்தமிழ்செல்வி, செந்தமிழ்செல்வன், கயல்விழி ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2006) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தமேனி,
அச்சுவேலி.

தகவல்:
இ.ரவி (சகோதரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசமான குற்றச்செயல்களுக்காகத் தேடப்படும்

# புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் 40பேரின் விவரங்களைப் பகிரங்கப்படுத்த அரசு முடிவு

கொழும்பு,செப்.20

மிக மோசமான குற்றச்சம்பவங்களுக்காகத் தேடப்படும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உட்படப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்கள் 40 பேரின் படங்கள் மற்றும் விவரங்களை வெகுவிரைவில் நாடளாவிய ரீதியில் பகிரங்கப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

அதேபோல் இந்த 40 பேரின் விவரங்களை சர்வதேச புலனாய்வுத்துறையினருக்கு வழங்குவதற்கும், விமானம் மூலம் வன்னி மற்றும் வடக்கு- கிழக்கின் பல இடங்களில் துண்டுப்பிரசுரங்கள் போடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்புத்துறையின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

புலிகள் இயக்கத்தின் இந்த முக்கியஸ்தர்களின் நடமாட்டத்தை அறிந்து கொள்வதற்காக மக்களை அறிவுறுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் குறித்து முக்கிய தகவல்களை வழங்குவோருக்குப் பெறுமதிமிக்க சன்மானங்களை வழங்குவதற்கும் அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## ஐயன்கேணியில் 3 இளைஞர்கள் கைது

ஏறாவூர் பொலிஸ் பிரிவின் ஐயன்கேணி கிராமத்தில் மூன்று தமிழ் இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தை வீதி, செங்கலடி என்னும் முகவரியைச் சேர்ந்த யோகேந்திரன் ரவிச்சந்திரன் (வயது-21), கொம்மாதுறை 10 ஆம் கட்டையைச் சேர்ந்தவர்களான யோகராஜா ராஜவிஜி (வயது19) இராசலிங்கம் குகன் (வயது-20) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

## கிண்ணியாவில் கைக்குண்டு வீச்சு

கிண்ணியா,செப். 20

கிண்ணியா புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில் பொதுமகன் ஒருவரின் கடையின் மீது கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது. எனினும் அக்குண்டு வெடிக்காததால் எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை.

இக்கைக்குண்டு அலிமுகம்மது ஹுசைன் என்பவரின் கடைக்கே வீசப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் தனிப்பட்ட குரோதம் காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என்றும், ஏற்கனவே கடை உரிமையாளரைக் கடையை விட்டு வெளியேறுமாறு கடிதம்மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் கடை உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவத்தைக் கேள்வியுற்ற பொலிஸார் குண்டு வீசப்பட்ட இடத்துக்குச் சென்று குண்டை செயலிழக்கச் செய்துள்ளனர்.

இதனால் நேற்றுக்காலை குறித்த வீதியூடாக பாடசாலைக்குச் சென்ற மாணவர்களும், ஆசிரியர்களும் வேறு பாதையால் செல்ல அனுமதிக்கப்பட்டதோடு, சில மணி நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது.

## கொழும்பில் தமிழ்ப் பிரமுகர் கடத்தப்பட்டார்

கொழும்பில் தமிழ்ப் பிரமுகர்கள் கடத்தப்படுவதைத் தடுக்கக் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அரசுத் தரப்பில் திடமான உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும் பதிவு செய்யப்பட்ட வைத்தியரான தமிழர் ஒருவர் கப்பம் கேட்டுக் கடத்தப்பட்டிருக்கின்றார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் கொட்டாஞ்சேனைப் பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

பாமஸி, அச்சகம் போன்றவற்றின் உரிமையாளரான இந்த டாக்டர் தமிழ்க் குழுவினரால் கப்பம் கேட்டு கடந்த ஒரு மாத காலமாக அச்சுறுத்தப்பட்டு வந்தார் எனக் கூறப்படுகின்றது.

தமது காருக்கு பெற்றோல் நிரப்பச் சென்ற இவர், அங்கிருந்தபடி தொலைபேசியில் தமது நிறுவன ஊழியர்களுக்குக் கடைசியாகத் தகவல் ஒன்றை அனுப்பினார் எனத் தெரிகின்றது.

அவரின் மனைவி லண்டனில் இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸில் இன்னும் முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவரவில்லை. (உ)

## பல்குழல் எறிகணை வீச்சு நேற்று

யாழ்ப்பாணம்.செப்.20

நேற்றிரவு புதிய சத்தத்துடனும், வேகத்துடனும் பல்குழல் எறிகணை வீச்சுக்கள் முகமாலைப் பக்கமாகச் செல்வதைக் கேட்க முடிந்தது.

இரவில் அடிக்கடி கேட்டு வந்த பல்குழல் எறிகணை வீச்சுச் சத்தம் கடந்த இரண்டொரு நாள்களாகக் கணிசமாகக் குறைந்திருந்தது.

ஆயினும் நேற்று இரவுமுதல் மிகவும் வித்தியாசமான சத்தத்துடன் பல்குழல் எறிகணைகள் பாய்ந்ததைக் கேட்க முடிந்தது.

## கிரானில் கிளைமோர்!

ஏறாவூர், செப். 20

கிரான் - கோரகல்லிமடு பிரதான வீதியில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்து நேற்றுக் காலை 7.30 மணியளவில் கிளைமோர் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், இராணுவத்தினர் குறித்த இடத்தை வந்தடைவதற்கு முன்னரே கிளைமோர் குண்டு வெடித்ததனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும், அருகில் இருந்த கட்டடம் ஒன்றுக்குச் சிறிது சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, கோரகல்லிமடுவில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டதுடன் வாகனங்களையும் சோதனைக்குட்படுத்தினர். எனினும், எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை, கோரகல்லிமடு பிரதேசத்தில் தொங்கவிடப்பட்டிருந்த சிவப்பு - மஞ்சள் கொடிகள் படையினரால் அகற்றப்பட்டன. தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவாக இந்தக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## மட்டுப்படுத்திய பஸ் சேவையே இன்றும்!

யாழ்ப்பாணம்.செப்.20

இலங்கைப் போக்குவரத்து சபையிடம் போதிய டீசல் இல்லாத நிலைமை எதிர்பார்க்கப்பட்டது போல நேற்றும் சீராகவில்லை. அதனால் இன்று குடாநாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட பஸ்சேவைகளே தொடர்ந்து நடைபெறும் என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்பார்க்கப்பட்டது போன்று டீசல் நேற்றும் கைக்கு வராமையால் சேவையை இன்றைய தினமும் வழமையான முழுமை நிலைக்கு கொண்டுவரமுடியாதிருப்பதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஜனாதிபதியுடன் அறுபது பேர் வெளிநாட்டில் ஆறரைக்கோடி-ரூபா விரயம் என்கிறது ஐ.தே.க.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 0 பேரடங்கிய தனது பரிவாரங்களுடன் வெளிநாடுகளுக்குச் சென்றதால் ஆறரைக் கோடி ரூபா செலவாகியுள்ளது. இன்றுள்ள நாட்டின் பொருளாதார நிலையில் ஆறரைக்கோடி ரூபா என்பது பெருந்தொகையாகுமென ஐ.தே.கட்சிப் பேச்சாளர் ஜயந்த கருணாதிலக எம்.பி. தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. ஜயந்த கருணாதிலக எம்.பி. தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் 61ஆவது கூட்டத்திலும் கலந்துகொள்வது அவசியம். இதுகுறித்து நாம் குறைகூறவில்லை. இருந்தும் அமைச்சர்கள் குழாமுடன் தமது நண்பர்கள் குழாமையும் அழைத்துச் சென்றுள்ளார். நாடு இன்றுள்ள பொருளாதார நெருக்கடியில் பரிவாரங்களை அழைத்துச் சென்றது தேவையற்றதாகும் என்றும் அவர் சொன்னார். (ஐ)

# வர்த்தகர்கள் கடத்தப்படுவது பற்றி ஆராய அரசியல் கட்சிகளின் விசாரணைக் குழு

கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்படுவது, காணாமற்போவது கொலை செய்யப்படுவது குறித்து ஆராய ஆறு அரசியல் கட்சிகள் இணைந்து விசாரணைக் குழுவொன்றை அமைத்துள்ளன.

ஐக்கிய சோசலிச முன்னணியின் தலைவர் சிறிதுங்க விஜயரட்ண தலைமையிலான இக்குழுவுக்கு கடத்தப்பட்டவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாமென மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நேற்றுத் தெரிவித்தார்.

கடத்தப்பட்டவர்கள் குறித்து பொலிஸார் மேற்கொள்ளும் விசாரணைகளை இக்குழு கண்காணிப்பதுடன் ஆதரவும் வழங்கும். இக்குழுவில் மேலக மக்கள் முன்னணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் காங்கிரஸ், இடதுசாரி முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கின்றனர். எதிர்காலத்தில் மேலும் பல கட்சிகளும் இவ்விசாரணைக் குழுவில் இணைத்துக் கொள்ளப்படுமென்றும் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார். (ஐ)

## நேற்று இரண்டாம் சுற்றுப் பேச்சு

பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுக்களின் இரண்டாவது சுற்று நேற்று இடம்பெற்றது.

இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கான பொதுச் செயற்திட்டத்தை உருவாக்குவதற்கான இக்கூட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

சுதந்திரக் கட்சியின் குழுவுக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமை வகித்தார். அமைச்சர்கள் மைத்திரிபால சிறிசேன, ஜோன் செனிவிரத்ன ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் குழுவுக்குப் பிரதித் தலைவர் கருஜயசூரிய தலைமை வகித்தார். மிலிந்த மொரகொட, ஜி.எல்.பீரிஸ், ருக்மன் சேனநாயக்க, ஜோன் அமரதுங்க மற்றும் மலிக் சமரவிக்கிரம ஆகியோர் அக்குழுவில் இடம்பெற்றனர். மூன்றாவது சுற்றுப் பேச்சு எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ-12)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து விடுதலைப் புலிகளும் படைகளின் முகாம்களை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். கரடியனாறு, தரவை, குடும்பிமலை மற்றும் புல்லுமலை ஆகிய பகுதிகள் மீதே விமானப் படையினர் தாக்குதல் நடத்தினர். விமானப்படையினர் வீசிய குண்டுகள் பொதுமக்களின் குடிமனைகள் மீதும் வீழ்ந்தன என்று புலிகளின் பகுதிகளிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (த)

## ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயரட்ண, கூட்டமைப்பு எம்.பி. நடராஜா ரவிராஜ், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் எம்.பியுமான அ. விநாயகமூர்த்தி உட்பட எஸ்.குருபரன், பிரபா கணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ஐ)

## முகமாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

போர் முன்னரங்கப் பகுதிகளுக்கு செய்தியாளர்களை இராணுவ வண்டிகளில் அழைத்து வருவது மிகவும் ஆபத்தானது. எங்களுக்கு அறிவிக்காமலேயே இவ்வாறு செய்தியாளர்களை இராணுவம் அழைத்து வந்திருக்கிறது - என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்தார்.

நேற்று முகமாலையில் நடத்தப்பட்ட ஷெல் வீச்சு, இராணுவத்தின் வலிந்த தாக்குதல்களுக்கு எதிராக வழமையாக நடத்தப்படும் பதில் தாக்குதல்தான். செய்தியாளர்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. செய்தியாளர்கள்தான் கவச வண்டிகளில் அழைத்து வரப்படுகிறார்கள் என்பது தெரிய வாய்ப்பில்லை. இவ்வாறு இராணுவ வாகன அணிகளில் வந்து படையினர் வலிந்து தாக்குவது வழமை என்றும் இளந்திரையன் குறிப்பிட்டார். (ஐ-12)

## பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படி அமெரிக்கா பலமுறை புலிகளுக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

பயங்கரவாத அச்சுறுத்தலை இன்று முழு உலகுமே எதிர்நோக்குகின்றது. பயங்கரவாதத்தை முறியடிக்கப் பலவழிகளிலும் அமெரிக்கா இலங்கைக்கு உதவி வருகின்றது. தசாப்த காலத்துக்கு முன்னரே அமெரிக்கா, புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமென அறிவித்தது.

அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் கடந்த மாதம் புலிகளின் 15 ஆயுதக் கடத்தல்காரர்களைக் கைதுசெய்தனர்.

இலங்கை அரசு அரசியல் ரீதியில் தீர்வு காண முயற்சிக்கவேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகள் வேதனைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக அரசு தனது விருப்பத்தைப் பகிரங்கப்படுத்தவேண்டும். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சமாதான முன்னெடுப்புகளில் இணக்கப்பாடொன்றைக் காண்பதற்கு ஸ்ரீல.சு.கட்சியும், ஐ.தே.கட்சியும் பேச்சுகளில் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது.

சமாதான முன்னெடுப்புகளுக்கு ஆதரவு வழங்கும் உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பில் அங்கம் வகிப்பதில் நாம் பெருமைப்படுகின்றோம். சமீபத்தில் பிரெசெல்ஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன். சமாதானத்துக்கான சிறந்தவொரு சந்தர்ப்பம் இதுவென உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகள் நம்புகின்றன. இரு தரப்பினரும் இச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக்கூடாது.

அமெரிக்க அரசு இலங்கையின் சமாதானத்திற்கான நோர்வேயின் அனுசரணைக்குத் தனது முழு ஆதரவையும் வழங்குகிறது. அத்துடன், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பங்களிப்பையும் பாராட்டுகிறது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து சமீபத்தில் பிரெசெல்ஸில் நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் ஆராயப்பட்டதென செய்தியாளரொருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போது புதிய தூதுவர் தெரிவித்தார். (ஐ)

## நாளை தொடக்கம் சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிப்பு

யாழ்ப்பாணம்.செப்.20

யாழ்.பகவான் ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக்கிழமை தொடக்கம் 27ஆம் திகதிவரை தினமும் காலை 9.30 மணிதொடக்கம் நண்பகல் வரை சீரடி பாபாவின் சத்சரிதம் வாசிக்கப் படவுள்ளது. 27ஆம் திகதி சீரடி பாபாவின் பிறந்த தினத்தன்று ஹோமத்துடன் நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறவுள்ளது. (203)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சையை உண்டுபண்ணியது. அத்துடன் நோர்வே. இலங்கை அரசுடன் கலந்தாலோசிக்காமல் எடுத்த முடிவின் அடிப்படையில் விடுக்கப்பட்ட அறிவிப்பு அது என்றும் இலங்கை அரசு விசனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நியூயோர்க் வந்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நோர்வேயின் வரம்பு மீறிய அனுசரணைப் பணி குறித்து நோர்வேப் பிரதமரிடம் நேரடியாகவே முறையிடவுள்ளார் என்று அரசுத் தலைமையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அமைதி முயற்சிகள் மற்றும் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து பல முக்கிய தீர்மானங்களை நோர்வேப் பிரதமருடனான சந்திப்பின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைப்பாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொண்டலிஸா ரைஸ் மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் பௌச்சர் ஆகியோரையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரத்தியேகமாகச் சந்திப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org